# வலயக் கல்வி அலுவலகம்-மூதூர்

# Zonal Education Office - Mutur

## இறுதிக்கணிப்பீடு – 2021 (2022)

தரம் :- 08 | பாடம்:-கர்நாடகசங்கீதம் | நேரம்:- 02 மணி

சுட்டெண் :- | பாடசாலை :-

01 சரியான விடையின் கீழ் கோடிடுக

01. ஸ்வரம் ஒலிக்கும் இடம்
    1. கீதம் 2. ஸ்வரதானம் 3. அலங்காரம் 4. லகு
02. "பொன்னார் மேனியனே" எனும் தேவாரம் அமைந்துள்ள இராகம்
    1. கல்யாணி 2. காபி 3. பந்துவராளி 4. ஆரபி
03. பிரக்ருதி ஸ்வரங்களாவன
    1. ரி ம ப நி 2. க ம ப நி 3. ஸ ப ஸ 4. ஸப
04. சங்கீத அப்பியாச முறையில் கீதம் எதன் பின் கற்பிக்கப்படும்
    1. அலங்காரம் 2. ஸ்வரவரிசை 3. நாட்டார் பாடல் 4.மேல்ஸ்தாயி வரிசை
05. காமன் கூத்தின்போது பிரதானமாகப்பயன்படும் தோற்கருவி
    1. டொல்கி 2. புறை 3 தம்பட்டம் 4. உடுக்கை
06. "குருநாதா" எனும் கீதம் அமைந்துள்ள இராகம்
    1. சதுஸ்ரஜாதி ரூபகம் 2. ஆதி 3. திஸ்ரஜாதிஏகம் 4. சங்கராபரணம்
07. "பாமரஜனகானம்" என அழைக்கப்படுவது
    1. சஞ்சாரிகீதம் 2. நாட்டார் பாடல் 3. தாலாட்டுப்பாடல் 4. திவ்யநாமக்கீர்த்தனை
08. உலோகத்தினைத் தட்டுவதன் மூலம் ஒல்யெழுப்பும் கருவிகள்
    1. தோற்கருவி 2. துளைக்கருவி 3. நரம்புக்கருவி 4. கஞ்சக்கருவி
09. $1_5$ இக் குறியீட்டினை உடைய லகுவின் வகை
    1. கண்டலகு 2. சங்கீர்ணலகு 3. மிஸ்ரலகு 4. சதுஸ்ரலகு
10. "உன்னை துதிக்க…." எனும் கீர்த்தனையை இயற்றியவர்
    1. அருணகிரி நாதர் 2. பாபநாசம் சிவன் 3. புரந்தரதாஸர் 4. எல் திலகநாயகம் போல்

10 X 02 = 20 புள்ளி

02. பொருத்தமான பதங்களைக் கொண்டு இடைவெளி நிரப்புக

01. தீவிர ஸ்வரத்தின் மறு பெயர்…………………………………………………ஆகும்
02. "சாதிஇரண்டொழிய……." எனும் வெண்பா அமைந்துள்ள இராகம்…………………………… ஆகும்
03. திரியாங்கத்தில் ஜாதி பேதமடையும் அங்கம்…………………………… ஆகும்
04. மேல்ஸ்தாயி வரிசைகளை இயற்றியவர்……………………………….. ஆகும்
05. "நாடித்தேடி………" எனும் திருப்புகழை இயற்றியவர்…………………………..ஆவார்

(மாயாமாளவகௌளை, சங்கராபரணம், லகு, த்ருதம் ,சின்னஸ்வரம், பெரியஸ்வரம், ஔவையார் ஸ்ரீ புரந்தரதாசர், அனுத்ருதம் , அருணகிரிநாதர்.)

05 X 01 = 05 புள்ளி

EXAMRESULTS.LK

03. **பொருத்தமான சொற்களுடன் தொடர்புபடுத்துக**

| | |
|---|---|
| 1. சுருதி வாத்தியம் | குந்தலவராளி |
| 2. மென்ஸ்வரம் | மிருதங்கம் |
| 3. பக்கவாத்தியம் | ஆஹிரி |
| 4. ஒப்பாரிப்பாடல் | தம்புரா |
| 5. "உன்னைத்துதிக்க….." | விக்ருதிஸ்வரம் |

**05 X 01 = 05 புள்ளி**

பகுதி : 11

பின்வரும் வினாத் தொகுதிகளுள் 05 வினாதட தொகுதிகளை மாத்திரம் தெரிவு செய்து வினாக்கட்கு விடை தருக

வினா : 01

1. ஸப்தஸ்வரங்கள்" எனும் ஏழு ஸ்வரங்களும் எத்தனை வகையாகப்பிரிக்கலாம் அவை எவை?
2. பிரக்ருதி ஸ்வரங்கள் விக்ருதிஸ்வரங்கள் என்பவற்றை முறையே தருக.
3. கோமளஸ்வரம் என்றால் என்ன? தமிழிசையில் இதன் பெயர் யாது?
4. தீவிரஸ்வரம் என்றால் என்ன? தமிழிசையில் இதன் பெயர் யாது?
5. விக்ருதிஸ்வரங்களின் கோமள பேத ஸ்வரங்களை முறையே தருக.

**(03 X 05 = 15 புள்ளி)**

வினா : 02

1. திரியாங்கங்கள் எவை?
2. திரியாங்கத்தில் ஜாதி பேதமடையும் அங்கம் எது?
3. லகுவின் ஜாதி பேதமடையும் வகை குறியீடு மெத்த அட்சரம் என்பவற்றை அட்டவணைப்படுத்துக.

(03+02+10 = 15 புள்ளிகள்)

வினா : 03

1. கீதம் எத்தனை வகைப்படும்? ஆவை எவை?
2. சஞ்சாரி கீதத்தின் மறுபெயர்கள் 02 தருக.
3. சஞ்சாரி கீதத்தின் சாகித்தியம் எவ்வாறு அமைந்திருக்கும்?
4. இலட்சணை கீதத்தின் இரு பிரிவுகளையும் தருக.
5. ஜனக இராகத்திலமைந்த இலட்சண கீதங்களின் மறு பெயர் யாது?

**(03 X 05 = 15 புள்ளிகள்)**

வினா : 04

1. இசைக்கருவிகளின் 4 பிரிவுகளும் எவை? ஒவ்வொரு பிரிவுகளுக்கும் இரண்டு உதாரணங்கள் வீதம் தருக.
2. பாரத முனிவரின் நாட்டிய சாஸ்த்திரம் எனும் நூலில் நால்வகை இசைக்கருவிகளின் பிரிவுகளின் பெயர்களை முறையே தருக.
3. பக்க வாத்தியமாகவும் பிரதான வாத்தியமாகவும் பயன்படும் சிறப்புக் கொண்ட வாத்தியம் எது?
4. பக்க வாத்தியங்களாகப் பயன்படும் வாத்தியங்களுக்கு மூன்று உதாரணங்கள் தருக
5. சுருதி வாத்தியங்கள் இரண்டு தருக.

(04+04+02+03+02 = 15 புள்ளிகள்)

வினா : 05

1. “கணநாதா.............” எனும் கீதத்தின் இராகம், தாளம், இயற்றியவர் என்பவற்றைத் தருக.
2. ஜண்டைவரிசைகள் அமைந்துள்ள இராகம், தாளம், இயற்றியவர் என்பவற்றைத் தருக.
3. “அன்பேதான்..........” எனும் கீதம் அமைந்துள்ள இராகம், தாளம், இயற்றியவர் என்பவற்றைத் தருக.
4. “சாதி இரண்டொழிய.........” இராகம், தாளம், இயற்றியவர் என்பவற்றைத் தருக.
5. “உன்னைத்துதிக்க...........” இராகம், தாளம், இயற்றியவர் என்பவற்றைத் தருக.

(03 X 05 = 15 புள்ளிகள்)